நெல்லியாளம் நகராட்சி அலுவலகம்,
பந்தலூர், நீலகிரி மாவட்டம்.

## சாதாரணக்கூட்டம் 30 /09 /2021 வியாழக்கிழமை

**பொருள்.1**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 14000/2021/இ1 நாள்.09.09.2021ல் கோரியுள்ளபடி பல்லடம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் புதிதாக ஏற்படுத்தியுள்ள மனைப்பிரிவுகள் மற்றும் விடுபட்ட இடங்களில் புதிதாக தெருவிளக்குகள் (LED விளக்கு) பொருத்துதல் பணிக்காக ரூ.250.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகையினை அரசிடமிருந்து முழு மானியமாக பெரும் பொருட்டு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. இத்திட்ட அறிக்கையினை நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் அலுவலகத்திற்கு அனுப்பி மேல்நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1479/2021/இ1) 121**

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்காண் பணிக்குத் தேவைப்படும் தொகையினை அரசிடமிருந்து முழு மானியமாக பெற்று மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள்.2**

நெல்லியாளம் நகராட்சியில் கீழ்காணும் ஒப்பந்ததாரர் திரு.பிரபாகரன் என்பவர் தனக்கு வழங்கப்படவேண்டிய வைப்பு தொகை நிலுவையினை வழங்க கோரி 03.09.2021 அன்று மனு சமர்ப்பித்துள்ளார்கள். 2017–2018 வரையிலான வருடத்திற்கான வைப்பு தொகைகள் Lapsed Register-க்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதால் ரூ.28645/–ஐ திரு.பிரபாகரன், ஒப்பந்ததாரருக்கு வழங்க தனி அலுவலரின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | திரு.பிரபாகரன் | 28645/– |

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**பொருள்.3**

நெல்லியாளம் நகராட்சியில் கீழ்காணும் ஒப்பந்ததாரர் திரு.பங்கஜாக்ஷன் என்பவர் தனக்கு வழங்கப்படவேண்டிய வைப்பு தொகை நிலுவையினை வழங்க கோரி 14.09.2021 அன்று மனு சமர்ப்பித்துள்ளார்கள். 2017–2018 வரையிலான வருடத்திற்கான வைப்பு தொகைகள் Lapsed Register-க்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதால் ரூ.79560/–ஐ திரு.பங்கஜாக்ஷன், ஒப்பந்ததாரருக்கு வழங்க தனி அலுவலரின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | திரு.பங்கஜாக்ஷன் | 79560/– |

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**பொருள்.4**

நெல்லியாளம் நகராட்சியில் கீழ்காணும் ஒப்பந்ததாரர் திரு.ஜெயநாதன், என்பவர் தனக்கு வழங்கப்படவேண்டிய வைப்பு தொகை நிலுவையினை வழங்க கோரி 25.08.2021 அன்று மனு சமர்ப்பித்துள்ளார்கள். 2017–2018 வரையிலான வருடத்திற்கான வைப்பு தொகைகள் Lapsed Register-க்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதால் ரூ.5465/–ஐ திரு.ஜெயநாதன், ஒப்பந்ததாரருக்கு வழங்க தனி அலுவலரின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | திரு.ஜெயநாதன் | 5465/– |

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள்.5</u>**

நெல்லியாளம் நகராசிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகத்திற்கு 110 மின் மோட்டார்கள் 10 டீசல் எஞ்சின்கள் மொத்தம் 120 குடிநீர் ஆதாரங்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பம்பு அறைகளிலுள்ள மின்மோட்டார்கள் மற்றும் டீசல் எஞ்சின்கள் இய்கக நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் ஒப்பந்த அடிப்படையில் அந்தந்த பகுதிகளில் உ.ள் நபர்களை வைத்து மின் மோட்டார்கள் இயக்கப்பட்டு பொது மக்களுக்கு குடிநுர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பம்பு இயக்கும் பணிக்கான ஒப்பந்தக்காலம் 31.07.2020 உடன் முடிவடைந்து விட்டதால் 01.08.2020 முதல் 31.12.2020 முடியவும், 01.01.2021 முதல் 31.03.2021 முடிய மூன்று மாத காலங்களுக்கு திரு.தேவேந்திரன் என்பவரின் பழைய ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்திலேயே நீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொள்ளவும் பட்டியல் தொகை வழங்கவும் நகர்மன்றத்தில் அனுமதி பெறப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. தற்போது 2021 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் நடைபெற இருப்பதை முன்னிட்டு 01.04.2021 முதல் 30.06.2021 முடிய மேலும் மூன்று மாத காலங்களுக்கு திரு.தேவேந்திரன் என்பவரின் பழைய ஒப்பந்தப்புள்ளியின்படி நீடிப்பு செய்து பணிகள் மேற்கொள்ளவும், பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டடுள்ளது. மேலும் செப்டம்பர் 2021 வரை ஒரு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்து நகர்மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது அக்டோபர் 2021 ஒரு மாத காலத்திற்கு திரு.தேவேந்திரன் என்பவரின் பழைய ஒப்பந்தப்புள்ளியின்படி நீடிப்பு செய்து பணிகள் மேற்கொள்ளவும், பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதி வழங்கலாம்

**<u>பொருள்.6</u>**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பந்தலூர் பஜார் பகுதி மற்றும் பந்தலூர் அம்பேத்கார் நகர் பகுதியிலும் பாராளுமன்ற உறுப்பினர் திட்டத்தின் கீழ் உயர் மின் கோபுர விளக்கு இரண்டு எண்ணங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு விளக்குகளும் பழுதடைந்து எரியாமல் உள்ளது. இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். இப்பராமரிப்பு பணி செய்வதற்கு தோராய மதிப்பு ரூ.2.00 இலட்சம் தயார் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோர தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதி வழங்கலாம்.

**பொருள்.7**

நெல்லியாளம் நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார வாகனம் (TN43Z4515) வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மற்றும் தகுதிச்சான்று பெற வேண்டியுள்ளதால் அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.40000/—த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள்.8**

நெல்லியாளம் நகராட்சியின் 2021—22—ம் ஆண்டு கணக்குகள் முடித்துக் கொடுக்க திரு.எ.வி.ஸ்ரீதர் என்பவர் அனுமதி வழங்குமாறு கோரியுள்ளார்.

இதன் பொருட்டு கணக்குகள் முழுவதுமாக முடித்து தணிக்கைக்கு அனுப்பிய பின்னர் தொகை ரூ.60000/—க்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.9**

நெல்லியாளம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் பணிபுரியும் மேற்பார்வையாளர் மற்றும் பரப்புரையாளர்களுக்கு திட்ட நிதி கிடைக்கும்வரை நகராட்சி பொது நிதியிலிருந்து ஊதியம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.10**

நெல்லியாளம் நகராட்சியில் டெங்கு நோய் தடுப்பு நடிவடிக்கைகளில் 20 DBC பணியாளர்களை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு15—ன்கீழ் பணியமர்த்தப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. அதற்கான தொகை வழங்க மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது..

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.11**

நெல்லியாளம் நகராட்சியில் மாபெரும் தூய்மை பணிகளுக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு15–ன்படி JCB ஐ திரு.செய்தலவி மூலம் ஈடுபடுத்தி பணி செய்யப்பட்டது. அதற்கான தொகை வழங்க மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.12**

நெல்லியாளம் நகராட்சியில் மாபெரும் தூய்மை பணிகளுக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு15–ன்படி புகைப்படங்கள் தயாரிக்கும் பணி திரு.பிரசாந்த் அஜந்தா ஸ்டுடியோ மூலம் மேற்கொள்ளப்பட்டது. அதற்கான தொகை வழங்க மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.13**

நெல்லியாளம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தில் AKAM செயல்பாடுகளை தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி செய்யப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும், தொகை வழங்க அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.14**

இந்நகராட்சியில் பொதுசுகாதாரப் பணிகளுக்காக 50 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் M/s.அட்சயா அசோசியேட்ஸ், கூடலூர் என்ற நிறுவனத்தின் மூலம் பணியமர்த்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தம் 30/09/2021–ல் முடிவடைவதால் மேலும் ஒரு மாத காலத்திற்கு 01/10/2021 முதல் 31/10/2021 வரை அத்தியாவசிய பணி என்பதால் ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து அதற்கான பட்டியல் தொகை வழங்கவும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பொதுசுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி அனுமதி வழங்கலாம்.

30/9/21

தனி அலுவலர்,(கூ.பொ)
நெல்லியாளம் நகராட்சி

30/9/2021